### மினி டைடல் பூங்காக்கள் : தமிழ்நாட்டில் மேலும் வேலை வாய்ப்புகளை விரிவடையச் செய்யும்!

# தமிழ்நாட்டின் வளர்ச்சிச் சரிதம் பல்கிப் பெருகுகிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**தூத்துக்குடி, டிச. 31 -**

**தூத்துக்குடியில் நேற்று முன்தினம், 'மினி டைடல் பூங்கா'வைத் திறந்து வைத்து, சமூக வலைதளங்களில் பதிவிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "தமிழ்நாட்டில் திறக்கப்படும் 'மினி டைடல் பூங்கா'க்கள், தமிழ்நாட்டில் மேலும் வேலைவாய்ப்புகளை விரிவடையச் செய்யும்" என்றும், "தமிழ்நாட்டில் வளர்ச்சிச் சரிதம் பல்கிப் பெருகுகிறது" என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

தூத்துக்குடி மினி டைடல் பூங்காவைத் திறந்து வைத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

தென் தமிழ்நாட்டின் முதல் டைடல் பூங்காவாக அமைந்துள்ள தூத்துக்குடி டைடல் பூங்கா அப்பகுதியில் வாய்ப்புகளுக்கான புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைத்து, இளம் திறனாளர்களுக்குப் புதிய வாசலைத் திறந்து விட்டுள்ளது. பட்டாபிராமில் திறந்து வைக்கப்பட்ட டைடல் பூங்கா, விழுப்புரம், தஞ்சாவூர், சேலம் மற்றும் தூத்துகுடியில் திறந்து வைக்கப்பட்டுள்ள நியோ டைடல் பூங்காக்களினால் தமிழ்நாட்டின் வளர்ச்சிச் சரிதம் பல்கிப் பெருகிறது.

நமது திராவிட மாடல் ஆட்சியில் மாநிலமெங்கும் தொடங்கப்பட்டுள்ள டைடல் பூங்காக்கள் ஆயிரக் கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கி, அனைவரையும் உள்ளடக்கிய சமத்துவமான வளர்ச்சியை முன்னெடுத்து வருகிறது. வேலூர், திருப்பூர், காரைக்குடி என அடுத்து தொடங்கப்படவுள்ள டைடல் பூங்காக்கள் மேலும் வாய்ப்புகளை விரிவடையச் செய்யும்.

இவ்வாறு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### தூத்துக்குடி மாநகராட்சி- பாளை சாலை

# தமிழ்ச் சாலை பகுதியில் உள்ள பூங்கா - படிப்பக வளாகம்! முதல்வர் பார்வையிட்டார்!

## மாணவ – மாணவியரிடம் கலந்துரையாடினார்!

**தூத்துக்குடி , டிச. 31 -**

**தூத்துக்குடி மாநகராட்சி சார்பில் பாளை சாலை தமிழ்ச்சாலை பகுதியிலுள்ள பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள படிப்பக வளாகத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டு, அங்கு படிக்கும் மாணவ, மாணவியர்களிடம் கலந்துரையாடினார்.**

அதன் விவரம் வருமாறு:-

தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பாளை சாலை தமிழ்ச்சாலை பகுதியில் அமைந்துள்ள பூங்காவில், டி.என்.பி.எஸ்.சி., வங்கி, இரயில்வே போன்ற பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் இளைஞர்களை ஊக்குவிக்கும் விதமாகவும், இயற்கை சூழலில் அமர்ந்து படிக்கும் வகையிலும் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்கள், நாளிதழ்கள், இருக்கை வசதி, மின் வசதி, வை-பை, குடிநீர் வசதி மற்றும் கழிவறை போன்ற அனைத்து கட்டமைப்பு வசதிகளுடன் தூத்துக்குடி மாநகராட்சி சார்பில் படிப்பக வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், தூத்துக்குடி மாநகர பகுதியைச் சார்ந்த இளைஞர்கள் பல்வேறு வகையான போட்டித் தேர்வுகளில் பங்கு பெற்று வெற்றி பெறுவதற்கு உந்து சக்தியாக இப்படிப்பகம் விளங்கி வருகிறது. இப்படிப்பகத்தில் தினமும் சுமார் 300 மாணவ, மாணவியர்கள் படித்து வருகின்றனர்.

மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம்(29.12.2024)தூத்துக்குடி, பாளை ரோடு தமிழ்ச்சாலை பகுதியிலுள்ள பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள இப்படிப்பக வளாகத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு, படிப்பகத்தில் படித்து வரும் மாணவ, மாணவியர்களிடம் அங்குள்ள வசதிகளும் குறித்தும், அவர்களது தேவைகளும் குறித்தும் கேட்டறிந்தார். மேலும், அம்மாணவ, மாணவியர்களிடம் நன்றாக படித்து, போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்று வாழ்வில் முன்னேற வேண்டும் என்று வாழ்த்தினார்.

இந்நிகழ்வின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, சமூகநலம் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதா ஜீவன், மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பி.ஜெகன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் எல்.மதுபாலன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### 48வது சென்னை புத்தகக் காட்சியில் – தினந்தோறும்

# திராவிட இயக்க ஆளுமைகளுடன் வாசகர்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சி!

## தமிழ் காமராசன் உடனான உரையாடலில் வாசகர்கள் ஆர்வமுடன் பங்கேற்பு!

**சென்னை, டிச. 31 -**

**சென்னையில் நடைபெறும் 48-வது புத்தகக் காட்சியில் திராவிட இயக்க ஆளுமை ஒருவருடன் தினந்தோறும் வாசகர்கள் பங்கேற்கும் கலந்துரையாடல் நிகழ்ச்சி 29.12.2024 அன்று நடைபெற்றது.**



இதில் திராவிட இயக்க, ஆய்வாளர் தமிழ் காமராசன் உடனான கலந்துரையாடலில், வாசகர்கள் பலரும் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில்27.12.2024 அன்று 48-வது சென்னை புத்தகக் காட்சியைத் தொடங்கி வைத்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக இளைஞர் அணியின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் பதிப்பக அரங்கைப் பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து, வாசகர்களின் வாசிப்பு அனுபவத்தை ஊக்குவிக்கும் விதமாக, தினம் தோறும் திராவிட இயக்க எழுத்தாளுமையை அழைத்து வந்து, வாசகர்களின் கேள்விக்குப் பதில் அளிக்கும் நிகழ்ச்சிக்கு முத்தமிழறிஞர் பதிப்பகம் ஏற்பாடு செய்துள்ளது.

அந்த வகையில், நேற்று முன்தினம் (29.12.2024) திராவிட ஆய்வாளர் தமிழ் காமராசன் பங்கேற்று, திராவிட இயக்கம் எப்படி எழுதியும் பேசியும் வளர்ந்தது என்பதை எடுத்துரைத்தார்.

பெரியார், அண்ணா, கலைஞர் போன்ற பெருந்தலைவர்கள் மட்டுமின்றி, கழகத்தில் சாமானிய தொண்டர்கள் கூட எழுதினர், பேசினர்.

அதுபோல இன்றைய இளம் தலைமுறையினரும் தி.மு.கழகத்தின் கொள்கையும், தமிழ்நாட்டிற்கு செய்திருக்கிற பங்களிப்பையும் எழுதவும், பேசவும் வேண்டும் என்று அவர் ஆற்றிய சிறு உரை வாசிப்பைத் தூண்டுவதாக அமைந்தது.

வாசகர்கள் தங்களுடைய சந்தேகங்களைக் கேட்டு விளக்கம் பெற்றனர்.

### சென்னை பல்கலைக் கழக இந்திய வரலாற்றுத்துறை சார்பில்

# பேராசிரியர் ஏ.கருணானந்தம் அறக்கட்டளை சொற்பொழிவு!

## கே.அசோக் வர்தன் ஷெட்டி ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) சிறப்புரை!

*சென்னை, டிச. 31-*

*சென்னை பல்கலைக் கழக இந்திய வரலாற்றுத் துறை சார்பில் பேராசிரியர் ஏ.கருணானந்தம் அறக்கட்டளையின் 2024- 2025ஆம் ஆண்டுக்கான பௌத்த மற்றும் திராவிட ஆய்வுகள் தொடர்பான சொற்பொழிவு 6.1.2025 திங்களன்று காலை 11 மணியளவில் நடைபெறுகிறது.*

*சென்னை பல்கலைக் கழக நூற்றாண்டு விழா கட்டடத்தில் உள்ள தந்தை பெரியார் அரங்கில் (எப்.50) நடைபெறும் இந்நிகழ்வில், ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியும் இந்திய கடல்சார் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தருமான கே.அசோக் வர்தன் ஷெட்டி பௌத்தமும் அறிவியல் மனப்பாங்கும் (BUDDHISM AND SCIENTIFIC TEMPER) என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றுகிறார்.*

*சிண்டிகேட் உறுப்பினரும் துறைத் தலைவருமான பேராசிரியர் எஸ்.எஸ்.சுந்தரம் நிகழ்ச்சிக்கு முன்னிலை வகிக்கிறார்.*





